புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# முல்லைத்திணை மக்களின் வாழ்வியல் கோட்பாடுகள்

க.கவிதா
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் 637 401.

முனைவர் து.ரேணுகாதேவி
நெறியாளர்&உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை திருவள்ளுவர் அரசு
கலைக்கல்லூரி, இராசிபுரம் 637 401.

ஆய்வுச்சுருக்கம்

முல்லை நிலம் என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகை நிலங்களில் ஒன்றாகும். காடும் காடு சார்ந்த பகுதி முல்லை நிலம் என்று அழைக்கப்படுகிறது. பழங்காலத்து தமிழ் மக்களின் வாழ்வியலை அறிவதற்குச் சங்ககால நூல்களே சிறந்த சான்றாகும். சங்ககால எட்டுத்தொகை அகநூல்களாக விளங்குபவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியனவாகும். சங்ககால முல்லைத்திணை மக்களின் வாழ்வியலைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளது. முல்லை நில ஆயர்கள் வீரத்தையும் காதலையும் மதித்துப் போற்றினர். பழந்தமிழ் மக்களுள் முல்லைநில ஆயர்களிடமே ஏறுதழுவி மணமுடிக்கும் முறை காணப்பட்டது. ஏறுதழுவுதல் காட்சிகளும் சங்ககால இலக்கியங்களில் முல்லைக்கலியில் மட்டுமே மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமே பழங்கலைகளுள் ஒன்றான இசைக்கலையும் தோன்றியது. இவர்கள் தமது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தப் பொழிலிடத்தே குரவைக் கூத்தாடினர். அப்பொழுது தங்கள் வேந்தனான பாண்டிய மன்னனையும் தங்கள் குலதெய்வமான திருமாலையும் வழிப்பட்டனர். முல்லை நில ஆயர்கள் உணவு, உடை, உறையுள் ஆகியவை கூறப்பட்டு அவர்களது தொழிலான ஆநிரை மேய்த்தலைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மக்களின் நாகரிகம், பண்பாடு, வளர்ச்சி எனப் பல நிலைகளில் சிறப்புற்று விளங்குகிறது முல்லை நிலம். எனவே முல்லை நில மக்களின் வாழ்வியலை முழுமையாக ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வில் சங்கப் பாடல்களை விளக்கிக் கூறுவதால், விளக்கமுறை அணுகுமுறையும், அவற்றைப் பகுத்து ஆராய்வதால் பகுப்புமுறை அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

## முன்னுரை

மனித சமுதாயம் என்பது பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும். பண்டைய சமுதாயத்தில் வாழ்ந்த மக்களிடையே நற்சிந்தனைகளும் நல்ல பழக்க வழக்கங்களும் நிரம்பிக்கிடந்தன. முல்லை என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகை தமிழ் நிலத்திணைகளில் ஒன்றாகும். செம்மண் பரந்திருந்த காரணத்தால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் வழங்கப்பட்டது. மாயோன் மேய காடுறை உலகமும் எனத் தொல்காப்பியம் முல்லை பற்றிக் கூறுகிறது. முல்லை நில மக்களின் வாழ்க்கை முறை. கடவுள் வழிபாடு, தொழில்கள், முல்லை மலர், உணவு முறை, ஆடை அணிகலன்கள், இசைக்கருவிகள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## முல்லை நிலம்

காடும், காடுசார்ந்த இடம் முல்லை நிலமாகும். இப்பகுதியில் செம்மண் பரந்திருந்ததினால் இந்நிலத்தைச் செம்புலம் என்பர். இந்நிலம் கார்பருவத்தில் வளம் பெற்று விளங்கும் எனக் கூறுவர். முல்லை மலரைப் பற்றிய செய்திகள் பல முல்லை நிலத்தில்

காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களுள் நப்பூதனார் என்னும் நல்லிசைப் புலவரால் முல்லைத்திணைப் பற்றி எழுதப்பட்ட முல்லைப்பாட்டு என்ற ஒரு தனி நூலே முல்லைத்திணையின் சிறப்பினை விளங்குவதாக அமைகிறது எனலாம்.

*முல்லை நில மக்களின் பெயர்கள்*

முல்லை நிலத் தலைவனை குறும்பொறை, நாடன் எனவும், தலைவியை தோன்றல், மனைவி, கிழத்தி எனவும், முல்லை நில மக்களை கோவலர், ஆயர், அண்டர், இடையர், இடைச்சியர், ஆய்ச்சியர் என்றும் பெயர்களை வைத்து அழைத்தனர்.

*முல்லை நில ஊர்ப்பெயர்கள்*

முல்லை நில மக்களின் ஊர்களான மாடம், பாக்கம், புறவினம், சிறுகுடி, சீறூர், வைப்பினாடு என்றும், முல்லை நிலக் காடுகளான புனம், புலம், காடு, கானம், குறுப்பொறை, கொல்லை, செந்நிலம், செஞ்சுவல், புறவு, மென்புலம், முரம்பு, வன்புலம் போன்ற பெயர்களைப் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகிறது.

*முல்லை நில வழியிடங்கள்*

காடும், காடுசார்ந்த இடங்களிலும் காடு திருந்திய வழியிடங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றை பெருவழி, நீளிடை, செந்நில மருங்கு, தெரு என்று அழைத்தனர்.

*முல்லை நில மக்களின் தொழில்கள்*

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடிப்படையாக அமைவது தொழிலாகும். மக்கள் தாங்கள் வாழும் நிலத்தின் அடிப்படையில் தொழில்கள் அமையும். இதனடிப்படையில் காடும், காடுசார்ந்த நிலத்தை முல்லை என்பர். முல்லை நிலத்தில் வாழும் மக்கள் ‘ஆயர்’ எனப்படுவர். இதனை, “ஆ என்பது பசு ஆயம் என்பது பசுத்திரள். அதை நம்பி வாழ்ந்தவர் ஆயர் எனப் பெற்றனர் எனவும், ஆய் என்னும் குடிப்பெயர் ‘அர்’ என்னும் பலர்பால் விகுதிபெற்று ஆயர் என ஆயிற்று எனவும் கொண்டு, ஆயர் என்போர் தாம் கொண்டிருந்த பசுத்திரள்களாலும் குடியாலும் பெயர்பெற்றவர்”[1] என்று அ.முத்துசாமி அவர்கள் முல்லைநில ஆயர் பற்றிக் குறிப்பிடுவதை அறியலாம்.

*ஆய்ச்சியர் தயிர் கடைதல்*

வைகறைப் பொழுதில் ஆய்ச்சியர் மிகவும் சுறுசுறுப்பாக செயல்படுவர். இரவு இருள் புலர்ந்து கெடும் விடியற்காலையில் மகளிர் விளாம்பழத்தின் மனம் நானும் பானையின்கண் நெய்பெறும் பொருட்டு மத்தினால் தயிர் கடைவர். ஆயர் மகளிர் தயிர் கடையுங்கால் எழும் வெண்ணெயின் பெரிய மதிப்பினை,

“பால்கடை நுரையின் பரூஉ மதிப்பு”[2]

என்பர். ஆயர் மகளிர் செறிந்த இருள் புலரும் விடியலில் பறவைகள் எழும்போதே எழுந்து விடுவர். மத்தினைக் கொண்டு கயிற்றை வலித்து உறையிட்டு இறுகிய தயிரைக் கடைவர். முல்லை நிலத்தில் வாழும் ஆய்ச்சியர் ஒவ்வொருவரும் இவ்வாறு இருள்புலரும் வைகறையில் தயிர் கடைதல் நடைமுறையாகும்.

*ஆய்ச்சியர் மோர் விற்றல்*

ஆயர் மகளிர் காலையில் தலையின் மேல் மெல்லிய சுமட்டின் கண் மோர்ப்பானையைக் கொண்டு சென்று புதிய மோரை விற்பர். அதற்கு ஈடாக நெல் முதலியவற்றைப் பெறுவார்கள். ஆயர் மகளிர் மோர் விற்றலை கலித்தொகை,

“… … … … … … … … … … … … … … …
பேரூருஞ் சிற்றூருங் கௌவை யெடுப்பவள் போல்
மோரோடு வந்தாள்… … … ..”[3]

என்ற பாடல் வரிகளின் வழி காட்டுகிறது. ஆய மகளிர் தான் கொண்டு வந்த மோருக்குப் பதிலாக கிடைக்கும் நெல்லை வட்டியில் (கடகப்பெட்டி) வாங்கிக் கொள்வர். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு வகையான நெல் பெறுவதால் அது பல நிறத்தை உடையதாக உள்ளது. இதனை, கலித்தொகை பாடல்,

"... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

வரிக்கூழ் வட்டி தழீஇ"[4]

என்று கூறுகிறது. ஆயர் மகளிர் மோர் விற்றுச் செல்வம் சேர்த்தலை,

"... ... ... ... ... ... ... அளைமாறி யாம்வருஞ்

செல்வம்... ... ... ... ... ... ... ... ... ... "[5]

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. முல்லை நில மகளிர் மோர் விற்று அதனால் வருகின்ற செல்வம் பற்றி கலித்தொகைப் பாடல்கள் குறிப்பிடுகிறது.

ஆயர் மகளிர் ஆநிரை மேய்த்தல்

ஆயர் மகளிரும் ஆநிரையை மேய்ப்பதற்காக ஒட்டிச் செல்வார்கள். இதனைக் கலித்தொகை,

"தீம்பால் கறந்த கலம்மாற்றிக் கன்றெல்லாம்

தாம்பின் பிணித்து, மனைநிறீஇ, யாய்தந்த

பூங்கரை நீலம் புடைதாழ மெய்அசைஇ, பாங்கரும்

முல்லையும் தாய பாட்டங்கால்! தோழி – நம்

புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்"[6]

என்ற பாடல் காட்டுகிறது. இதில் பால் கறந்த கலங்களை அவ்விடத்தினின்று எடுத்து வைத்துவிட்டுக் கன்றுகளைக் கயிற்றால் கட்டி பினைக்கண்ணே நிறுத்திவிட்டு, தாய் தந்த பூந்தொழிலினையும் கரையினையும் உடைய ஆடையை அணிந்து கொண்டு பசுவினம், எருமையினம் ஆகிய இரண்டையும் தம் தோட்டத்திற்கு ஓட்டிச் செல்வர். முல்லை நில மகளிர் ஆநிரைகளை மேய்த்தலைப் பற்றி கலித்தொகைப் பாடல் குறிப்பிடுகின்றது.

இரவு வாழ்க்கை

ஆயர் இடம் விட்டு இடம் சென்று ஆநிரை மேய்க்கும் தன்மையினர். இதனை, "ஆயர் வாழ்க்கை மேற்கொள்ளும் நாடோடிகள் கால்நடை வளர்த்தலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். வாழுமிடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் கால்நடைகளை வளர்க்க வேண்டிய நிலை இவர்களுக்கு உள்ளதால் பருவ காலங்களுக்கேற்பவோ சீரான இடைவெளி கொண்டோ இடம் விட்டு இடம்பெயர்ந்து மேய்க்கின்றனர்"[7] என்று பக்தவத்சல பாரதி கூறுகிறார். இதனால் இவர்கள் காடுகளில் இரவில் தங்க வேண்டியது இன்றியமையதாததாகும் என்பதை உணர முடிகிறது.

ஆயர் காட்டில் பால் கறந்து வந்து கொடுத்தல்

ஆயர் ஆநிரையை மாலையில் வீட்டிற்கு ஒட்டி வராது மேய்ச்சல் தலத்திலேயே தங்க வைப்பது உண்டு. அவ்வாறான காலங்களில் அங்கேயே பால் கறந்து வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் செல்வர். திரும்பிக் காட்டிற்குச் செல்லும் பொழுது பாற்சோற்றை எடுத்துச் செல்வர். இதனை,

"... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

பறியுடைக் கையர் மறியினத் தொழியப்

பாலொடு வந்து கூழொடு பெயரும்

யாடுடை யிடை மகன்... ... ... ... ... ..

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... "[8]

என்று உறையூர் முதுகொற்றன் எனும் புலவர் முல்லை நில ஆயர் காட்டில் பால் கறந்து வந்து கொடுத்தலைப் பற்றிக் கூறியுள்ளதை குறுந்தொகைப் பாடல் வழியாக அறிய முடிகிறது.

முல்லை நில ஆயர் பாலை விற்கும் பொருட்டு மாலைக்காலத்தில் வந்த இடையர் ஊரில் அதனை விற்றுவிட்டு அதற்கு விலையாக உணவுக்குரிய தானியத்தைப் பெற்றுச் செல்வர் எனவும் பொருள் கொள்ள இயலும். இடையர் பால் விற்றலை,

"... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ..

பால்நொடை இடையன்"[9]

என்று இடைக்காடனார் நற்றிணைப் பாடலில் கூறியுள்ளார்.

ஆயர் ஆநிரையுடன் காட்டில் தங்குதல்

ஆயர் இரவில் ஆட்டுக்குட்டிகளைச் சேரத் தொகுத்துள்ள ஓரைப்பாயை முதுகில் சுமந்திருப்பர். மிக்க இருளில் கொள்ளியின் தீயில் அகங்கை காய்ந்திடக் குறுநரிகளை நீண்ட ஒலி எழுப்பி ஓட்டுவர். இதனை,

"… … … … … … … … … … … … … … … … … … … … … …
வானெனப் பூத்த பானாட் கருகுல்
மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
தண்கமழ் முல்லை தோன்றியொரு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்
ஐதுபடு கொள்ளி அங்கை காயக்
… … … … … … … … … … … … … … … … …"[10]

என்று அகநானூற்றுப் பாடல் வழியாக ஆயர் ஆநிரையுடன் காட்டில் தங்கும் செய்தியினை குறிப்பிடுகின்றன.

முல்லை நில ஆயர் இரவில் வலிய கயிற்றையுடைய உறி, பானை, தோற்படுக்கை ஆகியவற்றை எப்பொழுதும் உடன் கொண்டு செல்வார்கள். கார்ப்பருவத்தின் பாதி இரவில் செம்மறியாட்டின் தொகுதியைப் பாதுகாவல் செய்யக்கடைக் கோயிலிருந்து தீயெழுப்பி விறகில் பற்றச் செய்வர். நுண்ணிய மழைத்துளி தன் ஒரு பக்கத்தை நனைத்திடக் கோலினைக் காலுடன் சார்த்தி ஊன்றித் தனியே நிற்பர். அப்பொழுது ஆட்டுக்குட்டியைக் கவரப் பார்த்திருக்கும் குள்ளநரி அஞ்சி ஓடுமாறு வாயை மடித்துச் சீழ்க்கை ஒலி எழுப்புவர். இதனை,

"… … … … … … … … … … … … … … … … … … … …
பருவஞ் செய்த பானாட் கருகுல்
ஆடுதலைத் துருவின் தோடே மார்ப்பக
கடைகோல் சிறுதீ அடைய மாட்டித்
திண்கால் உறியன் பானையன் அதளன்
நுண்பஃ றுவலை யொருதிறம் நனைப்பத்
தண்டுகோல் ஊன்றிய தனிநிலை யிடையன்
மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
தெறிமறி பார்க்குங் குறுநரி வெரீஇ
முள்ளுடைக் குறுந்தூறு இரியப் போகுந்
… … … … … … … … … … … … … … … … … … … … … …"[11]

என்று அகநானூற்றுப் பாடல் வழியாக அறியலாம்.

முல்லை நில ஆயர் கொடிய விலங்கினங்களிடமிருந்து ஆநிரையைத் தாக்காத வண்ணம் பெரிய மரங்களுக்குத் தீ வைத்து இரவு முழுவதும் எரியச் செய்து ஆநிரைகளை பாதுகாப்பர். இதனை நற்றிணை,

"… … … … … … … … … … … … … … … …
கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர ஒடியல் போல… … … … … …."[12]

என்ற பாடல் வரிகளின் வழி காட்டுகிறது. முல்லை நில தலைவன் காட்டிலே தங்கும்போது அங்கே கொடிய மிருகங்களிடமிருந்து தன்னையும், ஆநிரைகளையும் காக்கும் பொருட்டு இரவு முழுவதும் தீ எரியவிட்டு தூங்காமல் ஆநிரைகளை பாதுகாக்கின்றன என்பதை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

ஆயர் இரவு காட்டில் தங்கும் காலம் கார்காலமாகும். இதனை,

"… … … … … … … … … … … … … … … … … … … …
நனிகடல் முகந்து செறிதக இருளிக்
கனைபெயல் பொழிந்து கடுங்குரல் பயிற்றிக்
கார் செய்து… … … … … …"[13] என்பர். இக்கார்கால இரவில் ஆயர் மரங்களுக்குத் தீக்கொளுவி ஆநிரைகளைக் காத்து நிற்பர் என்று நற்றிணைப் பாடல் வரிகளின் வழி காட்டுகிறது.

முல்லை நில உழவர்

முல்லை நில ஆயரில் சிலர் சிறந்த உழவராகவும் திகழ்ந்துள்ளனர். ஆயர் மகளிர் பதமாகக் காய்ந்த அரிசியைச் சுழலும் மரத்திரிகையில் இட்டுச் சுழற்றுவர். இதனை,

"… … … … … … … … … … மனையோள்

ஐதுணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த
திரிமரம்… … … … … … … … .”[14]

என்பர். ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார். இவ்வாறாக முல்லை நில உழவர் ஆயர், ஆய்ச்சியர் பற்றி அகநானூறு பாடல் குறிப்பிடுகிறது.

*முல்லை நில மக்களின் உணவுமுறை*

முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் அங்கு கிடைக்கக்கூடிய இயற்கையான உணவுகளை தான் உண்டு வாழ்ந்து வந்தார்கள். முல்லை நில உணவு தினை, சாமை, நெல், பால் போன்ற இயற்கை உணவுகளை உண்டனர். முல்லை நிலத்து மக்கள் புதியதாக வருபவர்களுக்குப் பாலை கொடுத்து மகிழ்ந்தனர் என்றும், பாலில் வரகரிசியைச் சேர்த்துச் சமைத்த உணவையும் உண்டனர். இதனை,

“… … … … … … … … … … … … ..
வருகுவை யாயின் தருகுவென் பாலென
… … … … … … … … … … … … … … ”[15] என்று அகநானூறு பாடல் குறிப்பிடுகிறது.

*முல்லை நில மக்களின் விளையாட்டு*

முல்லை நிலத்து மக்கள் சிறந்த வீரர்களாயிருந்தனர். அந்நிலத்துப் பெண்கள் வீரர்களைத்தான் மணம் புரிந்து கொள்ளுவர். ‘கொல்லேறு தழுவுதல்’ என்பது ஒரு விளையாட்டு. பந்தயத்திற்கென்று வளர்க்கப்பட்ட காளைகளை அவிழ்த்து விரட்டுவர். அக்காளைகளை அடக்கிப் பிடிக்கின்றவர்களே பெண்களால் பாராட்டப்படுவார்கள். அவ்வீரர்களையே அந்நிலத்து மாதர்கள் மணந்து கொள்ளுவார்கள். இது பழந்தமிழ் நாட்டு வழக்கம். இதனை முல்லைக் கலியிலே காணலாம். கொல்லேறு தழுவுல் உயிருக்கு உலை வைக்கும் ஆபத்தான செயல். ஆயினும் அச்செய்கையில் வெற்றிப் பெறுகின்றவனையே ஆயர்க்குலப் பெண்கள் ஆண் மகனாக மதிப்பர். இல்லறத்தை இனிது நடத்துவதற்கு ஏற்றவனாக எண்ணுவர். இதனை,

“… … … … … … … … … … … …
எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு
கலங்கினர் பலர் … … … … … … … … ”[16]

என்று கலித்தொகை பாடல் குறிப்பிடுகிறது.

*ஆயர் மகளிர் பொழுதுபோக்கு*

ஆயர் மகளிர் பகலில் தோளி, கழங்கு ஆகிய விளையாட்டுகளை ஆடிப் பொழுதுபோக்குவது நடைமுறையாகும். ஆயர் மகளிர் தோளி என்னும் விளையாட்டினை ஆடுகின்றனர். இதனை,

“… … … … … … … … … … … … … … .
வையேர் வாலெயிற் றொண்ணுதல் மகளிர்
கைமாண் தோளி கடுப்ப, பையென
… … … … … … … … … … .”[17]

என்பர் மகளிர் தோளை வீசி ஆடுதல் தோளி எனப்பட்டது. ஆயர் மகளிர் கழங்கு என்னும் விளையாட்டினையும் விரும்பி ஆடுவர். இதனை,

“… … … … … … … … … … … … …
வணங்கிறை மகளிர் அயர்ந்தனர் ஆடும்
கழங்கு… … … … … … … … ”[18]

என்பர் மதுரைக் கூத்தனார். இவ்வாறாக முல்லை நில மகளிர் ஆடும் விளையாட்டைப் பற்றி அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

*முடிவுரை*

சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை அதன் தன்மையில் சிறந்து விளங்குவதைக் காண முடிகிறது. இயற்கையும், முல்லை நில மக்களின் வாழ்க்கை முறையும் ஒன்றியுள்ளன. முல்லை நிலத்தில் வாழும் வாழ்க்கைக்கு உகந்த காலமாகக் கார்காலம் அமைகிறது. அக்காலத்தில்

முல்லைக்காடு கண்கவரும் வனப்புமிக்க நிலமாகக் காட்சிதரும். இதனால் சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்களில் நிலமும் பொழுதும் மரமும் மலரும் புள்ளும் விலங்கும் பிறவும் பின்னணியாக இருக்கக் கருத்தொருமித்து நாடறிய நன்மணம் புணர்ந்த தலைவனும் தலைவியும் நடத்தும் இனிய இல்வாழ்க்கை உரிப்பொருளாய் அமைவதைக் காண முடிகிறது. முல்லையில் காணும் பிரிவுத்துயரும் இல்லற நெறியில் ஒருவொருக்காக ஒருவர் ஆற்றியிருக்கும் பண்பை வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது. முல்லைத்திணை தலைமக்கள் அவர்களுக்கென்று கற்பிக்கப்பட்ட நெறியின்றின்றும் பிறழாமல் வாழ்ந்து காட்டுவது மற்ற திணைகளில் காணப்படாத தனிச்சிறப்பாகும். கொல்லேறு தழுவி மணம் முடிக்கும் முறை முல்லை நில மக்களிடமே காணப்படுவதை அறிய முடிகிறது. ஏறுதழுவுதல் நிகழ்ச்சி முல்லைக்கலியில் மட்டுமே காணப்படுவதை அறிய முடிகிறது. முல்லைத்திணை மக்களின் வாழ்வியல் கோட்பாட்டைப் பற்றி முழுமையாக ஆய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

அடிக்குறிப்புகள்

1. முத்துசாமி அ., (1993), சங்க இலக்கியத்தில் ஆயர், ப.13, இராணிப் பதிப்பகம், சென்னை 14.
2. வேங்கடசாமி நாட்டார் ந.மு., சங்க இலக்கியம் – எட்டுத்தொகை அகநானூறு மூலமும் உரையும், பா.224, வ.6, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
3. புலியூர்க்கேசிகன், கலித்தொகை மூலமும் உரையும், பா.109, வ.6-7, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
4. மேலது., பா.109, வ.14.
5. மேலது., பா.106, வ.44-45.
6. மேலது., பா.111, வ.1-5.
7. பக்தவத்சலபாரதி (1990), பண்பாட்டு மானிடவியல், ப.471, மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு, சிதம்பரம், 608 001.
8. சுப்பிரமணியன் ச.வே., குறுந்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை 600 108.
9. பாலையன்.அ.ப, நற்றிணை மூலமும் உரையும், பா.142, வ.4, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
10. வேங்கடசாமி நாட்டார் ந.மு., சங்க இலக்கியம் – எட்டுத்தொகை அகநானூறு மூலமும் உரையும், பா.94, வ.3-7, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
11. மேலது., பா.274, வ.3-11.
12. பாலையன்.அ.ப, நற்றிணை மூலமும் உரையும், பா.289, வ.7-9, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
13. மேலது., பா.289, வ.4-6.
14. வேங்கடசாமி நாட்டார் ந.மு., சங்க இலக்கியம் – எட்டுத்தொகை அகநானூறு மூலமும் உரையும், பா.224, வ.11-13, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
15. மேலது., பா.54, வ.3-19.
16. புலியூர்க்கேசிகன், கலித்தொகை மூலமும் உரையும், பா.102, வ.21-24, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
17. வேங்கடசாமி நாட்டார் ந.மு., சங்க இலக்கியம் – எட்டுத்தொகை அகநானூறு மூலமும் உரையும், பா.334, வ.4-5, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014.
18. மேலது., பா.334, வ.7-8.

********* ********* ********** ********* ********* ********** ********* **********